**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 143/2015**

| | | | |
|---|---|---|---|
| | | **DEPOSITION OF WITNESS** | **DW.1** |
| NAME | சரண்யா | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 27.03.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் தற்போது பெங்களூரில் இருக்கிறேன். நான் டி.சி.எஸ்.சி–ல் வேலை செய்து வருகிறேன். 1ஆம் பிரதிவாதி சுகுணா (எ) சுகுமார் எங்களுக்கு உறவினர் அல்ல. ஹேமலதா எனது அம்மா. எனது அம்மா வாணியம்பாடி அல்லது குப்பத்தில் இருப்பார். எனது அம்மாவின் நிரந்தர குடியிருப்பு முகவரி வாணியம்பாடி. என்னுடைய நிரந்தர முகவரியும் வாணியம்பாடி தான்.

2. எனது ஆதார் கார்டு மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை ஆரம்பத்தில் இருந்து வாணியம்பாடி முகவரியில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது மற்றும் அதன் சர்வே எண் தெரியுமா என்றால் சொத்து குடியாத்தம், உள்ளி கிராமத்தில் உள்ளது அதன் சர்வே எண் தெரியாது. வழக்கு சொத்து ஒன்று இருக்கிறது என எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் சுமார் 10 முதல் 15 வருடத்திற்கு முன்பு தான் தெரியவந்தது.

3. அந்த 10 முதல் 15 வருடத்திற்கு முன்பு நடந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கை தனசேகரன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். தனசேகரன் அவரது சுவாதீனத்தை நாங்கள் தடை செய்யக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரிதான். வாதி என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். என்ன ஆவணங்கள் என சொல்ல முடியுமா என்றால் ஆவணத்தின் விவரம் தெரியும் ஆனால் என்ன ஆவணம் என சொல்ல தெரியவில்லை.

4. பட்டா பாஸ்புக் தாக்கல் செய்துள்ளது தெரியும். பட்டா பாஸ்புக் சட்டம் 1983–ன் படி தீனதயாளன் பெயரிலுள்ள பட்டா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தீனதயாளன் எழுதி வைத்த 30.07.2007 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயிலின் தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியும். தீனதயாளனின் அப்பா பெயர் முனிசாமி நாயுடு (எ) அப்பையா நாயுடு என்றால் சரிதான். அந்த உயிலை வழக்கு சொத்து குறித்து எழுதியுள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலில் யார் யாருக்கு சொத்தை எழுதி வைத்துள்ளார் என தெரியுமா என்றால் தெரியும்.

5. வழக்கு சொத்து குறித்து ஆன்லைன் பட்டா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.3 பட்டாவில் யார் யாருக்கு உயிலில் சொத்து எழுதி வைத்தாரோ அந்த நபர்களது பெயர்கள் உள்ளது என்றால் சரிதான். தீனதயாளனின் பெயரிலுள்ள பழைய பட்டாவை வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அ பதிவேட்டை நகலையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

6. வாதி அவர் தாக்கல் செய்துள்ள தாவாப்படி சொத்து தீனதயாளனுக்கு பாத்தியப்பட்டது என்றும் தீனதயாளன் எழுதி வைத்த உயிலின் படி தாவா சொத்தானது வாதிக்கு மற்ற நபர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவித்து வரும் சொத்தில் நாங்கள் தடை செய்யக்கூடாது என வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். சுகுணா என்பவர் இந்த நிலத்தை பராமரித்து வருவதாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

7. சுகுணா நிலத்தை பராமரித்து வருகிறார்கள் என்பதற்கு எந்த ஆவணத்தையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுகுணா என்பவர் கணவர் பெயர் என்னவென்றால் சுகுணா என்பவர் ஒரு ஆண். அவர் பெயர் சுகுணா (எ) சுகுமார் என்றால் சரிதான். அவர் அப்பா பெயர் எனக்கு தெரியாது. அவரது முகவரி எனக்கு தெரியாது. சுகுணா (எ) சுகுமாருக்கு நானோ அல்லது எனது அம்மாவோ குத்தகை பத்திரம் ஏதாவது எழுதிகொடுத்தோமா என்றால் இல்லை.

8. தாவா சொத்து உள்ளி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ளது என என்னிடம் யார் சொன்னது என்றால் எனது அப்பா. எனது அப்பா பெயர் ஜெயக்குமார். எனது அப்பா சுகுணா பெயருக்கு குத்தகை பத்திரம் ஏதாவது எழுதி கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. சுகுணா சொத்தை பராமரிப்பதாக எனக்கு சொல் கேள்வியாக தான் தெரியுமா என்றால் சரிதான், சுகுணா பெயருக்கு எனது தாத்தா ஸ்ரீதரன் ஆவணம் எழுதி வைத்துள்ளதாக எனது அப்பா சொன்னார், சாட்சி தற்போது அவரும் ஆவணம் பார்த்ததாக சொல்கிறார்.

9. நான் பார்த்ததாக சொல்லும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுகுணா (எ) சுகுமார் உள்ளி கிராமத்தை சேர்ந்தவர். நான் உள்ளி கிராமத்திற்கு சென்று அவரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் உள்ளி கிராமத்திற்கு சென்றதில்லை. நான் தாவா சொத்தை பார்த்ததேயில்லை என்றால் சரிதான். சின்ன கோட்டாளம் கிராமம் எங்குள்ளது என எனக்கு தெரியாது. உள்ளி கிராமத்தில் இருந்து சின்னகோட்டாளம் எவ்வளவு தூரம் என எனக்கு தெரியாது.

10. உள்ளி கிராமத்தில் இருந்து சின்னகோட்டாளம் 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சுகுணா (எ) சுகுமார் உள்ளி கிராமத்தை சேர்ந்தவர் இல்லை என்றாலும், அவருக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தானது ஆதியில் ராமசேஷ ஐயர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக 29.06.1924 தேதியிட்ட ஆவணத்தை பி.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றாலும் நகலை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

11. ராமசேஷ ஐயர் பிராமணர் வகுப்பை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் ராமசேஷ ஐயர் 11.02.1932-ல் வாதியின் தாத்தா முனிசாமி நாயுடு பெயருக்கு சுவாதீன அடமானம் எழுதி வைத்து சுவாதீனம் ஒப்படைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் கூற்று பிரகாரம் தாவா சொத்தை ராமசேஷ ஐயர் வாதியின் தாத்தா முனிசாமி நாயுடுக்கு சுவாதீன அடமானம் எழுதி கொடுத்து சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டார் என்றால் சரிதான்.

12. பி.ஆர்.பத்மநாபன், ராமசேஷ ஐயரின் மகன் என்றால் சரிதான். அவர் முனிசாமி நாயுடு மகன்கள் பெத்ததுரை நாயுடு (எ) வரதைய்ய நாயுடு, சின்னதுரை நாயுடு (எ) முனிசாமி நாயுடு, தீனதயாள நாயுடு, முனிரத்தின நாயுடு மற்றும் தீனபந்தலு நாயுடு ஆகியோர் மீது திருப்பத்தூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.252/1966 தாக்கல் செய்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு 11.02.1932 தேதியிட்ட சுவாதீன அடமானத்தை மீட்பதற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான்.

13. அந்த வழக்கு 22.11.1968-ல் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல்நிலை தீர்ப்பாணையின் நகல் தான் பி.சா.ஆ.2 என்றால் சரிதான். மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையின் தொடர்ச்சியாக பத்மநாபன் இறுதிநிலை தீர்ப்பாணைக்காக

மனு தாக்கல் செய்தாரா அது அனுமதிக்கப்பட்டதா என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதுபோல் இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்யப்பட்டு சுவாதீனம் நீதிமன்றத்தின் மூலமாக ஒப்படைக்கப்பட்டதா என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

14. பி.ஆர்.பத்மநாபன் எனது உறவினரா என்றால் எனது தாத்தா. எப்படி தாத்தா என்றால் எனது அப்பாவின் அப்பாவுக்கு பத்மநாபன் சித்தப்பா முறை. எனது தாத்தா ஸ்ரீதர் என்றால் சரிதான். பத்மநாபன், ஸ்ரீதரின் சித்தப்பா என்றால் சரிதான். பத்மநாபனுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவரது மனைவி பெயர் ஜெயலட்சுமி, அவர் இறந்துவிட்டார். பத்மநாபனுக்கு குழந்தைகள் இல்லை. பத்மநாபனுக்கு குழந்தைகள் இல்லை என்பதை நிரூபிக்க அவரது இறப்பு சான்றிதழோ அல்லது வாரிசு சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

15. பத்மநாபன் முதலில் இறந்தாரா அல்லது அவரது மனைவி ஜெயலட்சுமி முதலில் இறந்தாரா என்றால் பத்மநாபன் முதலில் இறந்தார். ஜெயலட்சுமி 2011-ல் இறந்தார். ஜெயலட்சுமிக்கு குழந்தைகள் இல்லை. ஜெயலட்சுமிக்கு உடன்பிறந்தவர் மாலினி ஒருவர் மட்டும். ஜெயலட்சுமி திருத்தனியில் இறந்தார். சாட்சி தற்போது அவர் சென்னையில் இறந்ததாக சொல்கிறார். ஜெயலட்சுமி இறந்ததற்கு இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்திருந்தேன். ஜெயலட்சுமியின் வாரிசு சான்றிதழும் என்னிடம் உள்ளது என்றால் உள்ளது. அதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

16. ஜெயலட்சுமி ஆவணம் ஏதாவது எழுதினாரா என்றால் ஒரு உயில் மட்டும் எழுதியுள்ளார். அது பதிவு செய்யப்பட்ட உயிலா என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. அந்த உயிலின் நகலை இதுநாள் வரை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களுக்கும் இந்த தாவா சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ராமசேஷ ஐயர், முனிசாமிக்கு அடமானம் கொடுத்ததில் இருந்து முனிசாமி அனுபவித்து வந்து அதன்பிறகு அவரது வாரிசுகள் தான் இதுநாள் வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

17. நாங்கள் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு செய்து உத்தரவு பெற்று நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலமாக தான் சொத்தின் சுவாதீனத்தை எடுக்க முடியும் என்றாலும் அதுவரை வாதியின் சுவாதீனத்தை தடை செய்ய முடியாது என்றால் சரியல்ல. நாங்கள் பட்டா மாறுதல் செய்யக்கோரி உத்தரவிட்டதாக தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.3 உத்தரவானது முறையான விசாரணைக்கு பின்பு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இல்லை என்றால் சரியல்ல.

18. அந்த பி.சா.ஆ.3 உத்தரவுக்கு எதிராக வாதி மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் எதிருரையிலும் மற்றும் முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானவை இல்லை என்றாலும் இந்த வழக்கிற்கும் எங்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/– K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.